**TAMIL NADU STATE MARKETING CORPORATION LIMITED**

**EMPLOYMENT NOTICE**

---

TASMAC invites applications for the post of Assistant Manager on contract basis with consolidated pay.

**Minimum Educational Qualification**:

Should have passed **B.Com with CA (Inter) / CMA (Inter**)
Knowledge in MS-Office and Tally.

**Experience** : Preference will be given to candidates with Experience in accounting assignment.

**Age** : Not exceeding 40 Years, as on 01.04.2017

**Consolidated pay:** Rs. 25,000/- (Rupees twenty five thousand only) per month

**No of Vacancies** : **36**

Application form and other details are available in the TASMAC's Website www.tasmac.tn.gov.in Filled in application shall be sent to the Managing Director, TASMAC Limited, CMDA Tower – II, IV Floor, Gandhi Irwin Bridge Road, Egmore, Chennai - 600 008, on or before 03.04.2017

The Government orders in vogue regarding reservation of posts for various categories will be followed.

for Managing Director 27/2/17

# தமிழ்நாடு மாநில வாணிப கழகம்
# வேலை வாய்ப்பு அறிவிப்பு

--

தமிழ்நாடு மாநில வாணிப கழகத்தில் ஒப்பந்த மற்றும் தொகுப்பூதிய அடிப்படையில் உதவி மேலாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**குறைந்தபட்ச கல்வித்தகுதி** – பி.காம் பட்டப்படிப்புடன் சி.ஏ / சி.எம். ஏ. ஏதாவதொன்றில் இடை நிலை (Inter) தேர்வில் தேர்ச்சி

– எம்.எஸ்–ஆபீஸ் (MS-Office) மற்றும் டேலி (Tally) ஆகியவற்றில் அனுபவம்

**அனுபவம்** : நிறுவனக் கணக்குகள் பராமரிப்பதில் முன் அனுபவம் பெற்றிருக்கும் நபர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

**வயது** : 40 வயதுக்கு மிகாமல் (01.04.2017 அன்று)

**தொகுப்பு ஊதியம்** : மாதம் ஒன்றுக்கு ரூ 25,000/– (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்)

**காலியாக உள்ள பதவிகளின் எண்ணிக்கை: 36**

விண்ணப்படிவம் மற்றும் மேல் விவரங்கள் டாஸ்மாக் நிறுவனத்தின் வலைதளம் www.tasmac.tn.gov.in –ல் கொடுக்கப்பட்டுள்ளன. உரிய படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் “ மேலாண்மை இயக்குநர்” டாஸ்மாக் லிட்., சி.எம்.டி.ஏ, டவர் –2, 4–வது மாடி, காந்தி இர்வின்பாலம் சாலை, எழும்பூர், சென்னை – 600 008.” என்ற முகவரிக்கு 03.04.2017 க்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும்.

நடைமுறையில் உள்ள இட ஒதுக்கீடு தொடர்பான அரசாணைகள் பின்பற்றப்படும்.

27/2/17

மேலாண்மை இயக்குநருக்காக

# தமிழ்நாடு மாநில வாணிப கழகம்
# வேலை வாய்ப்பு அறிவிப்பு

தமிழ்நாடு மாநில வாணிப கழகத்தில் உள்ள உதவி மேலாளர் பதவிக்கான காலியிடங்களை ஒப்பந்த அடிப்படையில் நிரப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்பதவிக்கான கல்வித் தகுதி, அனுபவம், வயது வரம்பு மற்றும் மாத ஊதியம் பற்றிய விவரம் பின்வருமாறு.

**குறைந்த பட்ச கல்வித் தகுதி:**

பி.காம் பட்டப்படிப்புடன் சி.ஏ. / சி.எம்.ஏ. ஏதாவதொன்றில் இடை நிலை தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் . இது தவிர கணினியில் எம்.எஸ். ஆபீஸ் (MS-Office) மற்றும் டேலி (Tally) மென் பொருளில் பணி செய்யத் தெரிந்திருக்க வேண்டும்.

**அனுபவம்:**

நிறுவனக் கணக்குகள் பராமரிப்பதில் முன் அனுபவம் பெற்றிருக்கும் நபர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**வயது:** 40 வயதுக்கு மிகாமல் (01.04.2017 அன்று)

**மாத ஊதியம்:**

ரூபாய் **25,000/–** (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) (தொகுப்பூதியம் ஒப்பந்த அடிப்படையில்)

**படிகள்:**

குறிப்பிடப்பட்ட தொகுப்பூதியம் தவிர மேல் குறிப்பிட்ட பதவியில் உள்ள நபர்களுக்கு அவர்கள் பணிக்காக செலவிடப்படும் பயணச் செலவு வழங்கப்படும்.

**காலியாக உள்ள பதவிகளின் எண்ணிக்கை: 36**

மேலே குறிப்பிடப்பட்ட தகுதி மற்றும் அனுபவம் உள்ள நபர்கள் தங்கள் தகுதி, வயது, வகுப்பு மற்றும் அனுபவம் ஆகிய விவரத்திற்கான சான்றுகளின் மேலொப்பம் இடப்பட்ட நகல்களுடன் பின்வரும் பத்தியில் கண்டுள்ள விண்ணப்படிவத்தில் பூர்த்தி செய்து அதனை " **மேலாண்மை இயக்குநர், டாஸ்மாக் லிட்., சி.எம்.டி.ஏ டவர் 2, 4–வது மாடி, காந்தி இர்வின் பாலம் சாலை, எழும்பூர், சென்னை – 08**" என்ற முகவரிக்கு **03.04.2017** –க்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும்.

<u>விண்ணப்ப படிவம்</u>

| | |
|---|---|
| 1. விண்ணப்பதாரர் பெயர் | : |
| 2. தகவலுக்கான முகவரி மற்றும் அலைபேசி எண். மின் அஞ்சல் முகவரி | : |
| 3. விண்ணப்பதாரரின் வகுப்பு | : அ.வ./அ.ப/மி.பி.வ/பி.வ/ இ.வ |
| 4. பாலினம் | : |
| 5. விண்ணப்பம் செய்துள்ள பதவியின் பெயர் | : |
| 6. பிறந்த தேதி மற்றும் வயது | : |
| 7. கல்வித்தகுதி | : |
| 8. அனுபவம் பற்றிய விவரங்கள் | |

1. நடப்பிலுள்ள அரசு ஆணைகளின்படி மேலே குறிப்பிட்ட பதவிக்கு அட்டவணை வகுப்பு (SC) / அட்டவணை பழங்குடியினர் (ST) / மிகவும் பின்தங்கிய வகுப்பினர் (MBC) / பின் தங்கிய வகுப்பினர் (BC) / இதர வகுப்பினர் (OC) ஆகியயோர்களுக்கான இட ஒதுக்கீடு பின்பற்றப்படும்.
2. பெண்கள், ஊனமுற்றோர் மற்றும் இதர தகுதி வாய்ந்தவர்களுக்கான இட ஒதுக்கீடு, நடப்பிலுள்ள அரசு ஆணைகளின்படி அளிக்கப்படும். முன்னாள் இராணுவத்தினர் விண்ணப்பம் சமர்ப்பிக்கும் போது அவர்களது தகுதி சம்பந்தமான சான்றிதழ் நகலை இணைக்க வேண்டும்.
3. விண்ணப்பதாரர்கள் நேர்முகத்தேர்வில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் பணி நியமனத்திற்கு தேர்வு செய்யப்படுவார்கள்.
4. நேர்முகத் தேர்வுக்கான நாள், தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கு கடிதம் மற்றும் மின்னஞ்சல் மூலம் தெரிவிக்கப்படும்.

காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. **விண்ணப்ப உறை மீது விண்ணப்பம் செய்துள்ள பதவியின் பெயர் கண்டிப்பாக குறிப்பிடப்பட வேண்டும்.** அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் நபர்கள் தங்கள் அலுவலகம் மூலமாக விண்ணப்பம் அனுப்புதல் வேண்டும் அல்லது நேர்காணலின்போது தாங்கள் பணிபுரியும் அலுவலகத்திலிருந்து தடையில்லா சான்று பெற்றுத் தர வேண்டும். மேலே குறிப்பிட்ட பதவிக்கு தேர்வு பெறும் நபர்கள் தமிழ்நாட்டில் எங்கும் பணி நியமனம் செய்யப்படுவதோடு தேவை ஏற்படின் வேறு இடங்களுக்கும் மாறுதல் செய்யப்படுவார்கள்.

24/2/17

மேலாண்மை இயக்குநருக்காக